Regd.with the Registrar of Newspapers for India.No.TN TAM /2007/22101
Regd.TN/CC(S)Dn/326/10-12

இப்பொழுது விற்பனையில்!

அரிய பழைய பாடல்கள்..

..புதிய இசையில்




ACD

Produced by: ℗&© 2011
**Kennedy** Ministries
A-4, Deju Plaza, No.2, South Avenue
Srinagar Colony, Saidapet, Chennai - 600 015
T: +91 44 22353500, 9940667881, 9940350460
E: kennedy@kennedyministries.org W: www.kennedyministries.org
facebook.com/kennedyministries

Music On
**music mindss**
A GOSPEL - MEDIA COMMUNICATIONS
Post Box No. 5312|Chennai - 24|Tel: 044-42 917 917
2472 5031, 2480 0632, Tele - Fax: 2480 3938
E-mail: gospelmedia@musicmindss.com,
Visit us at: www.musicmindss.com

M.R.P. ₹ 75/- in Tamilnadu. ₹ 85/- in Other States in India.
BUY ORIGINAL CD's/MP3/DVD WITH MUSIC MINDSS HOLOGRAM

எல்லா கிறிஸ்தவ புத்தகக் கடைகளிலும் கிடைக்கும்!

Owned and Published by: S. Paulraj Kennedy from A-1, Deju Plaza, No. 2, South Avenue, Srinagar Colony, Saidapet, Chennai - 600 015. Phone: +91 - 44 - 22353500
Printed by: Jolly Peter at Sharp Offset Printers, New No. 96, Old No. 223, Peters Road, Royapettah, Chennai - 600 014. Phone: +91 - 44 - 28480607
Editor: Nija Kennedy

# ஒளி எக்காளம்

VOL . 5 ISSUE . 7

தனிப்பிரதி ரூ 20/= பிப்ரவரி 2012



# தேவ பிரசன்னம்

- நிஜா கென்னடி



**நம்முடைய தேவனாகிய கர்த்தரை நாம் தொழுதுகொள்ளுகிற போதெல்லாம் அவர் நமக்கு சமீபமாயிருக்கிறார்** (உபாகமம் 4:7). நம்மில் அநேகருக்கு கர்த்தர் நம்முடன் இருக்கிறாரா இல்லையா என்பது குறித்து சந்தேகம் வந்து விடுகிறது. இன்னும் சிலருக்கு கர்த்தர் என்னுடன் இருந்தால் அவருடைய பிரசன்னத்தை நான் உணர வேண்டும் என்கிற எண்ணம் வருகிறது. அப்படி உணர முடியாததால் கர்த்தர் என்னுடன் இல்லை என்று அங்கலாய்க்கிறார்கள். இன்னும் சிலருக்கு, நான் பல கஷ்டங்கள், பாடுகள், நெருக்கங்கள், வேதனைகள் படுகிறேனே கர்த்தர் இதைப் பார்க்கிறாரா, என்னுடன் இருக்கிறாரா என்கிற எண்ணம் வருகிறது. இன்னும் சிலர் கர்த்தர் பரலோகத்தில் இருக்கிறார். நாம் பூமியில் இருக்கிறோம் அவர் எப்படி நம் சூழ்நிலைகளை அறிவார் என்று எண்ணிக் கொண்டிருக்கிறார்கள். இன்னும் சிலருக்கு நான் கர்த்தரைத் தேடுகிறேன், ஜெபிக்கிறேன், வேதத்தை படிக்கிறேன் ஒரு பலனும் என் வாழ்க்கையில் கிடைக்கவில்லை என்று வேதனையோடு இருக்கிறார்கள்.

பிரியமானவர்களே! கர்த்தர் தம்மை தேடுகிறவர்களுக்கு பலன் கொடுக்கிறவராய் இருக்கிறார். உண்மையாய் தேடினால் அவரைக் கண்டடையலாம். அவரது பிரசன்னத்தை உணரலாம். கர்த்தர் நம் வேதனைகள், பாடுகள் எல்லாவற்றையும் அறிந்து வைத்திருக்கிறார். அவர் நம்மை காண்கிற தேவனாயிருக்கிறார். நம் நினைவுகளை தூரத்திலிருந்து அறிகிறார். நம் இருதயத்தின் வாஞ்சைகள், எண்ணங்கள் எல்லாவற்றையும் அறிந்திருக்கிறார். அவருக்கு மறைவானது ஒன்றுமில்லை. நம் சூழ்நிலைகளை அவர் அறிந்திருக்கிறார். யாரும் நம்மைக் குறித்து அவருக்குச் சொல்லவேண்டிய அவசியமேயில்லை. அவர் சகலத்தையும் அறிந்து வைத்திருக்கிறார். மனுஷனுடைய உள்ளந்திரியங்களை ஆராய்ந்து அறிந்திருக்கிறார். இருதயத்தின் ஏங்கல்களையும், நினைவுகளையும், சிந்தனைகளையும் நம் தேவன் அறிவார்.

**மனுஷருள்ளத்திலிருப்பதை அவர் அறிந்திருந்தபடியால்,**



**மனுஷரைக் குறித்து ஒருவரும் அவருக்குச் சாட்சிக் கொடுக்க வேண்டியதாயிருக்கவில்லை** (யோவான் 2:25). ஒரு மனுஷனின் மனதில் என்ன இருக்கிறது என்பதை கர்த்தர் அறிந்தவராயிருக்கிறார். மனுஷன் பார்க்கிற விதமாய் நம் தேவன் நம்மை பார்ப்பதில்லை. மனுஷர்கள் நம் வெளிதோற்றத்தைப் பார்ப்பார்கள். ஆனால், கர்த்தரோ மனுஷனின் இருதயத்தைப் பார்க்கிறார் (1 சாமுவேல் 16:7). மனுஷர்கள் யாரும் நம்மை புரிந்து கொள்ள முடியாது. கர்த்தர் மட்டுமே நம்மைப் புரிந்து கொள்ள முடியும். **எல்லாவற்றைப் பார்க்கிலும் இருதயமே திருக்குள்ளதும், மகாகேடுள்ளதுமாயிருக்கிறது. அதை அறியத்தக்கவன் யார்?** (எரேமியா 17:9). தந்திரமுள்ள இருதயத்தை யாராலும் புரிந்து கொள்ளமுடியாது. கர்த்தர் மாத்திரமே அந்த இருதயத்தை அறிந்து கொள்ள முடியும்.

**கர்த்தர் எல்லா இருதயங்களையும் ஆராய்ந்து, நினைவுகளின் தோற்றங்களையெல்லாம் அறிகிறார்; நீ அவரைத் தேடினால் உனக்குத் தென்படுவார்; நீ அவரை விட்டுவிட்டால் அவர் உன்னை என்றைக்கும் கைவிடுவார்** (1 நாளாகமம் 28:9). கர்த்தர் இருதயங்களை ஆராய்ந்து அறிந்திருக்கிறார். அவரிடமிருந்து, நாம் ஒன்றையும் மறைக்க முடியாது. நம் இருதயத்தில் மறைந்திருக்கிற எல்லாவற்றையும் பார்த்து நம்மை புரிந்து வைத்திருக்கிறார். நம் உணர்வுகளை அறிந்திருக்கிறார். **பாதாளமும் அழிவும் கர்த்தரின் பார்வைக்குப் பிரத்தியட்சமாயிருக்க, மனுபுத்திரனுடைய இருதயம் அதிக பிரத்தியட்சமாயிருக்குமல்லவோ?** (நீதிமொழிகள் 15:11). நம் எண்ணங்கள், நம் குறிகோள்கள், நம் நினைவுகள் அனைத்தையும் அறிந்திருக்கிறார். நாம் உதவிக்காக அவரை நோக்கிக் கூப்பிடும்போது, அவர் நமக்கு பதில் தருவார். நாம் கர்த்தரை தேடாமல் அவரை விட்டு விலகும்போது, அவரும் நம்மை விட்டு விடுவார். பல தீங்குகள் இக்கட்டுகள் வரும்.

நாம் கர்த்தரைப்பற்றி அறிகிற அறிவில் தினமும் வளர வேண்டும். அப்படி வளரும்போது கிருபையும், சமாதானமும் நம் வாழ்க்கையில் பெருகும். தேவனோடுகூட தனிப்பட்ட உறவு நமக்கு வேண்டும். பாவத்துக்கு விலகி பரிசுத்தமாக வாழவேண்டும். தேவ அன்பு நம்மில் நிலைத்திருக்க பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தைப் பெற்றுக் கொள்ள வேண்டும். கர்த்தருடைய வேதத்தை நேசிக்கிறவர்களுக்கு மிகுந்த சமாதானம் உண்டு. **ஒன்றான மெய்தேவனாகிய உம்மையும், நீர் அனுப்பினவராகிய இயேசுகிறிஸ்துவையும் அறிவதே நித்திய ஜீவன்** (யோவான் 17:3). நாம் இயேசு கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டு அவரது வார்த்தையின்படி நடக்கும் போது, பிதாவும், குமாரனும் நமக்குள் வாசம் செய்வார்கள்.

**மேன்மைப் பாராட்டுகிறவன் பூமியிலே கிருபையையும், நியாயத்தையும், நீதியையும் செய்கிற கர்த்தர் நான் என்று என்னை அறிந்து உணர்ந்திருக்கிறதைக் குறித்தே மேன்மைப்பாராட்டக்கடவன் என்று கர்த்தர் சொல்லுகிறார்; இவைகளின் மேல் பிரியமாயிருக்கிறேன் என்று**

**கர்த்தர் சொல்லுகிறார்** (எரேமியா 9:24). ஜனங்கள் வழக்கமாக ஒருவரது ஞானத்தைக் குறித்தும், பதவியைக் குறித்தும், இரக்கத்தைக் குறித்தும், பணத்தைக் குறித்தும், புகழ்ந்துபேச விரும்புவார்கள். அதற்கே முக்கியத்துவம் கொடுப்பார்கள். இயேசு கிறிஸ்து நாம் தனிப்பட்ட முறையில் அவரைப் பற்றி அறிகிற அறிவில் வளர்ந்து அவரைப்போல நீதியும், நியாயமுமாக இருந்து அவரைப் பிரதிபலிக்கிறவர்களாக வாழ விரும்புகிறார். நாம் நம்முடைய வாழ்க்கையில் எதற்கு முக்கியத்துவம் கொடுக்கிறோம்.

### நம் நடுவில் இருக்கும் கர்த்தர்

**தம்மை நோக்கிக் கூப்பிடுகிற யாவருக்கும், உண்மையாய்த் தம்மை நோக்கிக் கூப்பிடுகிற யாவருக்கும் கர்த்தர் சமீபமாயிருக்கிறார்** (சங்கீதம் 145:18). கர்த்தருக்கு பயந்து, அவருடைய வழிகளில் நடக்கிற எல்லோருடைய ஜெபத்திற்கும் கர்த்தர் பதில் கொடுக்கிறவராயிருக்கிறார். என்ன செய்வதென்று அறியாத இக்கட்டான வேளைகளில் கர்த்தரை நோக்கிக் கூப்பிடும்போது, அவர்களோடுகூட இருந்து அவர்களை விடுவித்து பாதுகாக்கிறவராய் இருக்கிறார். சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ என்பவர்கள் பொற்சிலையை வணங்காததால், மூவரையும் எரிகிற அக்கினிச் சூளையின் நடுவிலே போட்டார்கள். மூவரும் நேபுகாத்நேச்சாரிடம் நாங்கள் ஆராதிக்கிற தேவன் எங்களை தப்புவிக்க வல்லவராயிருக்கிறார், ராஜாவாகிய உம்முடைய கைக்கும் நீங்கலாக்கி விடுவிப்பார் என்றனர். அதுபோலவே சூளையில் நடுவில்



கர்த்தர் அவர்கள் நடுவில் உலாவி, அவர்களுக்கு ஒரு சேதமுமில்லாமல் விடுவித்து பாதுகாத்தார். அவர்களை தூக்கிச் சென்றவர்கள் சூளையின் சூட்டினால் மரித்துப்போனார்கள்.

நாம் ஜெபிக்கும்போது, கர்த்தர் நம் ஜெபத்தைக் கேட்கிறார் என்கிற விசுவாசத்தோடுகூட ஜெபிக்க வேண்டும். நம்மில் அநேகர், கர்த்தர் பரலோகத்தில் இருக்கிறார். நாம் பூமியில் இருக்கிறோம், நம் ஜெபத்தை கர்த்தர் எப்படி கேட்பார் என்று நினைக்கிறோம். பிரியமானவர்களே, நாம் தேவனை நோக்கி, உண்மையாய் கூப்பிடும்போது, கர்த்தர் நம் அருகில் இருக்கிறார். நம் வாயினால் சொல்ல முடியாத இருதயத்தின் ஏங்கல்களையும் கர்த்தர் அறிந்து அதற்கு பதில் கொடுக்கிறார். நாம் சடங்காச்சாரமாக, கடமைக்காக ஜெபிக்காமல் உண்மையாய் ஜெபிக்க வேண்டும். நாம் முழு இருதயத்தோடு அவரைத் தேடும்போது, அவருடைய பிரசன்னத்தை நாம் உணர்ந்து கொள்ள முடியும்.



நாம் கூடி ஜெபிக்கும்போதும், வேதத்தை தியானிக்கும்போதும், தேவனை ஆராதித்து துதிக்கும் போதும், கர்த்தருடைய பிரசன்னத்தை உணர முடியும். தேவன் ஆவியாய் இருக்கிறார். **அவரைத் தொழுது கொள்ளுகிறவர்கள் ஆவியோடும் உண்மையோடும் தொழுது கொள்ள வேண்டும்** (யோவான் 4:24). நாம் நம் வாயினால் அவரை துதித்துக் கொண்டு அதே நேரத்தில் நம் இருதயத்தில் வேறொரு காரியத்தை சிந்தித்துக் கொண்டிருந்தோமானால், நாம் கர்த்தருடைய பிரசன்னத்தை உணரமுடியாது. **உங்கள் முழு இருதயத்தோடும் என்னைத் தேடினீர்களானால் என்னைத் தேடுகையில் கண்டுபிடிப்பீர்கள்** (எரேமியா 29:13).

**தேவன் ஆவியாய் இருக்கிறார்** (யோவான் 4:24). மனிதர்களாகிய நாம் மாம்சத்தில் இருக்கிறோம். இந்த மாம்சத்திற்குள்ளே ஆவியும், ஆத்துமாவும் உண்டு. நம்முடைய மாம்சத்தினாலோ அல்லது ஆத்துமாவினாலோ (மனது, சித்தம், உணர்ச்சிகள்) ஆவியாய் இருக்கிற தேவனுடைய பிரசன்னத்தை பெறவோ, உணரவோ முடியாது. நம்முடைய ஆவியினாலேயே பரிசுத்த ஆவியானவரின் பிரசன்னத்தை பெற முடியும். ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து நமது ஆவியினாலே தேவனை தொழுது கொள்ளவேண்டும் என்கிறார் (யோவான் 4:23). அப்போஸ்தலனாகிய பவுல் ஆவியினாலே விண்ணப்பம் பண்ணுவேன், ஆவியினாலே பாடுவேன் என்கிறார் (1 கொரிந்தியர் 14:15). பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தை கர்த்தர் நமக்கு தருவதே நமக்குள்ளே அவர் வாசம் செய்வதற்காகவே. **நாமே பரிசுத்த ஆவியானவர் ஆளும் ஆலயம்** (1 கொரிந்தியர் 3:16, 6:19).



இன்று நம்மில் அநேகர் மாம்சத்தின் அடிப்படையிலும், உணர்ச்சிகளின் அடிப்படையிலும், பரிசுத்த ஆவியானவரின் பிரசன்னத்தை பெற முயற்சிக்கிறோம். சிலர் பெரும் சத்தத்தை எழுப்பியும், இசைக்கருவிகளை வேகமாக இசைத்தும், ஆவியானவரின் பிரசன்னத்தை பெற முயற்சிக்கிறார்கள். இவையெல்லாம் போலித்தனமானதும், நாடகமுமாகும். நமது உணர்ச்சிகளின் அடிப்படையில் தேவபிரசன்னத்தை பெறவே முடியாது. சங்கீதம் 39:3-ல் தாவீது இப்படியாகச் சொல்லுகிறான்: **என் இருதயம் எனக்குள்ளே அனல் கொண்டது; நான் தியானிக்கையில் அக்கினி மூண்டது; அப்பொழுது என் நாவினால் விண்ணப்பம் செய்தேன்.** தாவீதைப்போல நாமும் வேதத்தின் வார்த்தைகளை தியானிக்க வேண்டும். நாம் எவ்வளவுக்கு எவ்வளவு அதிகமாக கர்த்தருடைய வார்த்தையை தியானிக்கிறோமோ, அவ்வ

ளவுக்கவ்வளவு பரிசுத்த ஆவியின் அபிஷேகம் நமக்குள்ளே பெருகும். இதில் முக்கியமானதொரு காரியம், பாவ மன்னிப்பின் நிச்சயத்தை நாம் பெற்றிருக்க வேண்டும். கல்வாரி சிலுவையில் நமது இரட்சகரும், ஆண்டவருமாகிய இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தால் நாம் கழுவப்பட்டு, பரிசுத்தமாக இருக்கவேண்டும். **பரிசுத்தமில்லாமல் தேவனை தரிசிக்க முடியாது** (மத்தேயு 5:8). குற்றமற்ற நல்மனசாட்சி இருந்தால்தான் பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தை நாம் பெறமுடியும். கர்த்தருடைய வார்த்தை, அபிஷேகம் நிறைந்தவையாகும். இதை வேதம் இப்படியாக சொல்லுகிறது. **தேவனுடைய வார்த்தை ஆவியாயும், ஜீவனுமாய் இருக்கிறது** (யோவான் 6:63). **வேதவாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது** (2 தீமோத்தேயு 3:16). அபிஷேகம் நிறைந்த வார்த்தைகளை நாம் படிக்கும்போது, அபிஷேகத்தில் நிரம்புவோம். இதுவே தேவபிரசன்னமாகும். வேதத்தைப் படிக்கும்போது ஜெபசிந்தையோடு படிக்கவேண்டும். வேதத்தைப் படிப்பது என்பது கர்த்தர் நம்மோடு பேசுவதாகும். நம்முடைய அறிவினால், அனுபவத்தினால் அறிந்து கொள்ள முடியாத காரியங்கள் வார்த்தைக்குள் இருக்கின்றது. நமக்குள் இருக்கிற பரிசுத்த ஆவியானவர் அவற்றை நமக்கு வெளிப்படுத்துவார். பரிசுத்த ஆவியானவர் நம் ஆவியிலே வெளிப்படுத்தும் காரியமே தேவ பிரசன்னத்தை பெறுவதாகும்.

**கூக்குரலைக் கேட்கும் கர்த்தர்**

இஸ்ரவேல் ஜனங்கள் எகிப்து தேசத்திலே அடிமைகளாக இருந்தார்கள். எகிப்தியர்கள் இஸ்ரவேலரை கொடுமையாய் வேலை வாங்கினார்கள். ஆளோட்டிகளினிமித்தம் அவர்கள் இடுகிற கூக்குரலைக் கர்த்தர் கேட்டார். அவர்கள் படுகிற வேதனைகளையும் அறிந்திருந்தார் (யாத்திராகமம் 3:7). எகிப்தியர்கள் அவர்களை ஒடுக்குகிற ஒடுக்குதலையும் கண்டார். கர்த்தர் இஸ்ரவேலரை எகிப்தியரின் கையிலிருந்து விடுதலையாக்கவும், எகிப்தியரின் தொல்லையில்லாமல் அவர்கள் சுதந்திரமாக வாழவும், அவர்களை பாலும், தேனும் ஓடுகிற தேசமாகிய கானான் தேசத்திற்கு கொண்டு போகவும் கர்த்தர் இறங்கினார். இதுபோலத்தான் கர்த்தர் நமக்கு உதவி செய்ய இறங்கி வருவார். நம்மை ஒடுக்குகிறவர்களிடமிருந்து நம்மை விடுவிப்பார். நம் கூக்குரலை கேட்பார். நம் வேதனைகளை அறிந்திருக்கிறார். எகிப்தியரின் அடிமைத்தனத்திலிருந்து அற்புதமாக விடுவித்து, எகிப்திலிருந்து வெளியேறச் செய்தார். கர்த்தர் அவர்களோடுகூட இருந்து பகலிலே மேகஸ்தம்பத்தினாலும், இரவிலே அக்கினி ஸ்தம்பத்தினாலும், ஜனங்களை வழிநடத்திச் சென்றார். எகிப்தியர் மறுபடியும் அவர்களை பின்தொடர்ந்தபோது, இஸ்ரவேல் ஜனங்கள் பயந்து கர்த்தரை நோக்கிக் கூப்பிட்டனர். எப்பக்கமும் ஓடமுடியாத சூழ்நிலை. இரண்டு பக்கமும் மலைகள் முன்பக்கம் கடல். கர்த்தர் தம் ஜனங்களுக்காக செங்கடலையே இரண்டாக பிளந்து இயற்கைக்கப்பாற்பட்ட விதத்தில் அற்புதம் செய்து, ஜனங்களை பாதுகாத்து விடுவித்தார். எகிப்தியர்கள் கடலிலே மூழ்கிப் போயினர். இப்படியாகத்தான் கர்த்தர் நம்மோடிருப்பதைக் காண்பிப்பார்.



இக்கட்டான வேளையிலே யாருமே நமக்கு உதவி செய்யாத நேரத்திலே கர்த்தர் நமக்கு உதவி செய்வார். அற்புதங்களையும், அதிசயமான காரியங்களையும் கர்த்தர் நம் வாழ்க்கையில் செய்வார்.

எங்களுக்கு எந்த மனிதர்களுடைய உதவியும் இல்லையே, தனியாக இருக்கிறோமே என்று கலங்கித் தவிக்காதீர்கள். கர்த்தர் நம்மோடுகூடதான் இருக்கிறார். சிலர் முறுமுறுத்துக் கொண்டிருப்பார்கள். இஸ்ரவேல் ஜனங்களும் நாங்கள் எகிப்திலே அடிமையாய் இருந்திருப்போமே, வனாந்திரத்திலே சாகும்படியாக ஏன் எங்களை எகிப்திலிருந்து அழைத்துக் கொண்டு வந்தீர் என்று மோசேயிடம் முறையிட்டு முறுமுறுத்தார்கள். நம்முடைய வாழ்க்கையில் போராட்டங்கள், சோதனைகள் வரும்போது, அவிசுவாசமான வார்த்தைகளைப் பேசாமல், கர்த்தரை நோக்கிக் கூப்பிட்டு, அவர் நம் வாழ்க்கையில் செய்த நன்மைகளை நினைத்து துதிக்க வேண்டும். அப்பொழுது இயற்கைக்கப்பாற்பட்ட விதத்தில் நமக்கும் கர்த்தர் அற்புதம் செய்து பெரிய காரியங்களை செய்து கொடுப்பார்.

**நம்மோடு பேசும் கர்த்தர்**

கர்த்தர் இஸ்ரவேலரை கானானுக்கு வழிநடத்திச் செல்ல மோசேயை தெரிந்தெடுத்தார். கர்த்தர் மோசேயோடு முகமுகமாய் பேசினார். ஒரு நண்பனோடு உறவாடுவதுபோல உறவாடினார் (யாத்திராகமம் 33:11). மோசே இஸ்ரவேல் ஜனங்களுக்காக தேவனிடம் விண்ணப்பம் பண்ணினான். நாமும் முழுமையாக, அவரை சார்ந்து அவருடைய ஊழியத்தை செய்யும்போது நம்மோடும் பேசுவார். கர்த்தர் ஒரேபிலே அக்கினியின் நடுவிலிருந்து ஜனங்களோடே பேசினார். கர்த்தர் சீனாய் மலையின்மேல் அக்கினியில் இறங்கினபடியால் அது முழுவதும் புகைக்காடாய் இருந்தது; அந்தப் புகை சூளையின் புகையைப்போல எழும்பிற்று; மலை முழுவதும் மிகவும் அதிர்ந்தது (யாத்திராகமம் 19:18). எக்காளசத்தம் உரத்து தொனிக்க ஆரம்பித்தது. மோசே தேவனிடம் பேசியபோதெல்லாம் தேவன் அவனுக்கு வாக்கினால் பதிலளித்தார். பாளையத்தில் இருந்த ஜனங்களெல்லாரும் இடிமுழக்கத்தை கேட்டார்கள். மின்னலையும், புகையையும் கண்டு மிகவும் பயந்து நடுங்கினார்கள். அவர்கள் மோசேயிடம் நீர் எங்களோடு பேசும். தேவன் எங்களோடே பேசினால் நாங்கள் செத்துப்போவோம் என்றார்கள். **கர்த்தர் எலியாவோடு அமர்ந்த**

**மெல்லிய சத்தத்தில் பேசினார்** (1 இராஜாக்கள் 19:12). இப்பொழுது பரிசுத்த ஆவியானவராக நமக்குள் வந்து நம்மோடு பேசுவார்.

யோசேப்பு

**கர்த்தர் யோசேப்போடே இருந்தார்; அவன் காரியசித்தியுள்ளவனானான்; அவன் எகிப்தியனாகிய தன் எஜமானுடைய வீட்டிலே இருந்தான்** (ஆதியாகமம் 39:2). கர்த்தர் யோசேப்போடுகூட இருப்பதையும், அவன் செய்கிற அனைத்தையும் கர்த்தர் வாய்க்கப் பண்ணுகிறார் என்பதையும் போத்திபார் உணர்ந்து கொண்டான். யோசேப்பினிமித்தம் கர்த்தர் போத்திபாரை ஆசீர்வதித்தார். அவன் சிறைச்சாலையில் இருந்தபோது, சிறைச்சாலை தலைவனுடைய தயவு கிடைக்கும்படி கர்த்தர் செய்தார். கர்த்தர் யோசேப்போடு இருந்ததால் சிறைச்சாலைத் தலைவன் அவனை முழுமையாக நம்பி எல்லா பொறுப்புகளையும் அவனுக்குக் கொடுத்தான். பின்பு யோசேப்பை கர்த்தர் எகிப்து தேசத்திற்கே அதிகாரியாக உயர்த்தினார். யோசேப்பின் உயர்வுக்கு காரணம் அவன் கர்த்தரோடு கூட ஐக்கியமாய் வாழ்ந்ததே.

கர்த்தர் நம்மோடுகூட இருக்க வேண்டுமானால், நாம் கர்த்தரோடுகூட ஐக்கியமாய் இருக்கவேண்டும். வேதத்தை படித்து தியானிக்க வேண்டும். அவரோடுகூட பேசவேண்டும். அப்பொழுது நாம் செய்யும் காரியங்களை கர்த்தர் வாய்க்கச் செய்வார். அப்பொழுது கர்த்தர் நம்மோடுகூட இருப்பதை அறிந்து கொள்ளலாம். நம்மை சுற்றியிருப்பவர்களும் கர்த்தர் நம்மோடுகூட இருப்பதை அறிந்து கொள்வார்கள்.

தானியேல்

**தானியேலுக்குள் விசேஷித்த ஆவி இருந்தமையால் அவனை ராஜ்யம் முழுமைக்கும் அதிகாரியாக ஏற்படுத்த ராஜா நினைத்தான்** (தானியேல் 6:3). இதனால் மற்ற அதிகாரிகள் தானியேலின்மேல் பொறாமை கொண்டு குற்றம் கண்டு பிடிக்க முயன்றனர். அவர்களால் தானியேலிடம் எந்த குறையையும் கண்டுபிடிக்க முடியவில்லை. தானியேலோ உண்மையுள்ளவனாயிருந்தான். தேவனைப்பற்றிய வேத விஷயத்திலே குற்றம் காண வேண்டும் என முடிவு செய்தனர். அவர்கள் ராஜாவிடம் சென்று, முப்பது நாட்களுக்கு ராஜாவாகிய உம்மைத்தவிர வேறெந்த தேவனையோ, மனிதரையோ நோக்கி எந்த ஒரு காரியத்திற்கும் ஜெபம் செய்தால், அவன் சிங்கக்கெபியிலே போடப்படுவான். இப்பொழுது இதனைச் சட்டமாக்கி, இதில் கையெழுத்து போடும் என்று கூறினர். ராஜாவும் கையெழுத்து போட்டான். தானியேலோ இதை அறிந்திருந்தும் எப்பொழுதும் போல தினம் மூன்று வேளையும் தேவனுக்கு முன்பாக முழங்கால்படியிட்டு தேவனை நோக்கி ஜெபம் பண்ணினான். அந்த மனிதர்கள் தானியேல் ஜெபிப்பதைக் கண்டு, ராஜாவிடம் போய், நீர் கையெழுத்திட்ட சட்டத்திற்கு தானியேல் மரியாதை செலுத்தவில்லை என்று கூறி அவனை சிங்கக்கெபியிலே போட வைத்தனர். ராஜாவால் அவனைத் தப்புவிக்க முடியவில்லை. ஆனால், தேவன் அவனை அசாதாரணமான முறையில், தம்முடைய தூதனை அனுப்பி சிங்கங்களின் வாயைக்கட்டி,



அவைகள் அவனை சேதப்படுத்தாதபடி பாதுகாத்தார். ராஜா அதிகாலையில் துயரச் சத்தமாய் தானியேலை இப்படியாகக் கூப்பிட்டான்: **தானியேலே, ஜீவனுள்ள தேவனுடைய தாசனே, நீ இடைவிடாமல் ஆராதிக்கிற உன்தேவன் உன்னைச் சிங்கங்களுக்குத் தப்புவிக்க வல்லவராயிருந்தாரா என்று கேட்டான்** (தானியேல் 6:20). தானியேல் தேவனை இடைவிடாமல் ஆராதிப்பதை ராஜாவும் அறிந்து வைத்திருந்தான். நாம் இடைவிடாமல் தேவனை ஆராதிக்கிறோமா? தானியேலின் உயர்வும், அசாதாரணமான முறையில் சிங்கக்கெபியிலிருந்து தப்புவிக்கப்பட்டதன் இரகசியம் அவன் தேவனோடுகூட ஐக்கியமாய் இருந்ததுதான்.

தானியேலோடு கர்த்தர் இருந்ததை நெபுகாத்நேச்சார் அறிந்து கொண்டான். நாமும் தேவனோடு நெருங்கிய உறவில் இருக்கும்போது நம்மோடுகூட தேவன் இருப்பார். நம்மை உயர்ந்த ஸ்தானத்தில் நிறுத்தி நம்மை உயர்த்துவார். நம்மால் செய்ய முடியாத காரியங்களை நமக்கு செய்து கொடுத்து, தேவன் நம்மோடு இருப்பதை காண்பிப்பார். எதிரிகளின் வாயை கர்த்தர் அடைத்து போடுவார். தேவன், தம்மைத் தேடுகிறவர்களுக்கு பலன் கொடுக்கிறவராயிருக்கிறார்.நாமும் தானியேலைப் போல தேவனை இடை விடாமல் ஆராதிப்போம்.

எஸ்தர்

**எஸ்தருக்குத் தன்னைக் காண்கிற எல்லார் கண்களிலும் தயை கிடைத்தது** (எஸ்தர் 2:15). ராஜா, மற்ற ஸ்திரீகளைப் பார்க்கிலும் எஸ்தர்மேல் அன்பு வைத்தான்; சகல கன்னிகைகளைப் பார்க்கிலும் அவளுக்கு அவன் சமூகத்தில் அதிக தயையும்,பட்சமும் கிடைத்தது; ஆகையால் அவன் ராஜ கிரீடத்தை அவள் சிரசின்மேல் வைத்து, அவளை வஸ்தியின் ஸ்தானத்திலே பட்டத்து ஸ்திரியாக்கினான் (எஸ்தர் 2:17). எஸ்தர் தன்னை வளர்த்த மொர்தெகாய்க்குக் கீழ்ப்படிந்து நடந்தாள். யூதகுலத்தையே அழித்துவிட ஆமான் சதிதிட்டம் போட்டான். எஸ்தர் யூத ஜனங்களை காப்பாற்ற ராஜாவால் அழைக்கப்படாதிருந்தும், தன் உயிரை பணயம் வைத்து, துணிந்து ராஜசமூகத்தில் சென்று பேசினாள். அப்பொழுதும் ராஜாவின் கண்களில் அவளுக்கு தயை கிடைத்தது. தன்



ஜனங்களுக்காக தானும், தனது தாதிமாரும் உபவாசித்து ஜெபித்தது மட்டுமல்லாமல், யூதர்கள் அனைவரும் உபவாசித்து ஜெபிக்கும்படி, வேண்டிக் கொண்டாள். அவர்கள் விண்ணப்பத்தின் படி, யூத ஜனங்கள் அழிக்கப்படாமல் பாதுகாக்கப்பட்டார்கள். எஸ்தரோடு கர்த்தர்கூட இருந்ததை நாம் அறிந்து கொள்ளலாம்.

### ஆபிரகாம்

கேரார் என்ற ஊரின் ராஜாவாகிய அபிமெலேக்கு ஆபிரகாமிடம் இப்படியாகச் சொன்னான்: **நீ செய்கிற காரியங்கள் எல்லாவற்றிலும் தேவன் உன்னுடனே இருக்கிறார்** (ஆதியாகமம் 21:22). ஆபிரகாம் செய்கிற எல்லாவற்றிலும் தேவன் அவனோடு இருப்பதை அபிமெலேக்கு அறிந்து கொண்டான். ஆபிரகாம் கேராரில் குடிவந்தபோது, அந்த ஊர் மக்கள் தெய்வ பயமில்லாதவர்கள் என்று பயந்து, தனது மனைவி சாராளை சகோதரி என்று கூறினான். அதனால் அபிமெலேக்கு சாராளை தன்னிடம் அழைப்பித்தான். தேவன் சொப்பனத்தின் மூலமாக அவனோடு இப்படியாக பேசி எச்சரித்தார்: **நீ அழைப்பித்த ஸ்திரீயின் நிமித்தம் நீ செத்தாய்; அவள் ஒருவனுடைய மனைவியாயிருக்கிறாளே** என்றார். சாராளினிமித்தம் தேவன் அபிமெலேக்கின் வீட்டாரின் கர்ப்பங்களையெல்லாம் அடைத்தார். தேவன் அவனிடம் சாராளை, ஆபிரகாமிடம் திரும்ப அனுப்பவில்லை என்றால் நீயும் உன்னை சேர்ந்த அனைவரும் செத்துப்போவீர்கள்; ஆபிரகாம் ஒரு தீர்க்கதரிசி; நீ பிழைக்கும்படி அவன் உனக்காக ஜெபிப்பான் என்றார்.

தேவன் ஆபிரகாமோடு இருந்ததால், அபிமெலேக்கை எச்சரித்து சாராளை பாதுகாத்தார். ஆபிரகாம் ஜெபித்தபோது, தேவன் அபிமெலேக்கையும், அவன் மனைவியையும், அவன் வேலைக்காரிகளையும் குணமாக்கி பிள்ளைப்பெறும்படி அனுக்கிரகம் பண்ணினார் (ஆதியாகமம் 20:18). ஆபிரகாம் தேவனோடு நெருங்கிய உறவு வைத்திருந்ததால் தான் அபிமெலேக்கை தண்டித்து, தேவன் ஆபிரகாமோடு இருப்பதை காண்பித்தார். அபிமெலேக்கு தேவனுக்கு பயந்திருந்தான். ஆபிரகாம் தேவனிடம் முகமுகமாய் ஒரு நண்பனுடன் பேசுவதுபோல பேசினான். அதனால் அபிமெலேக்கு தேவனோடு உறவாடிக் கொண்டிருக்கும் அபிரகாமுடன் நல்ல உறவில் இருக்க விரும்பி அவனோடு உடன்படிக்கை செய்து கொண்டான். நாமும் தேவனோடு நெருங்கிய உறவு வைத்திருக்கும்போது, நமக்கு எதிராக செயல்படுகிறவர்களை தேவன் எச்சரிப்பார். தேவன் நம்மோடு இருப்பதை இப்படியாக அவர்களுக்குக் காண்பிப்பார்.



### ஈசாக்கு

பஞ்சகாலத்தில் ஈசாக்கு விதை விதைத்தபோது, கர்த்தர் அவனை ஆசீர்வதித்ததினால் அந்த வருடத்தில் நூறு மடங்கு பலன் கிடைத்தது (ஆதியாகமம் 26:12). ஈசாக்கு ஐசுவரியவனாகி வரவர விருத்தியடைந்து, மகா பெரியவனானான். அதனால் பெலிஸ்தியர் அவன்மேல் பொறாமை கொண்டார்கள். அவன் வெட்டிய கிணறுகளையெல்லாம் மூடிப்போட்டார்கள். பெலிஸ்தியரைப் பார்க்கிலும் ஈசாக்கு மிகவும் பலத்தவனானதால், பெலிஸ்தியரின் ராஜாவாகிய அபிமெலேக்கு அவனை கேராரை விட்டு போகும்படி கூறினான். ஈசாக்கு அந்த இடத்தை விட்டு கேராரின் நதிக்கரையில் குடியேறினான். அங்கும் கேராரின் மேய்ப்பர்கள் வாக்குவாதம் பண்ணினார்கள்.

பின் ஈசாக்கு பெயெர்செபாவுக்கு போனான். கர்த்தர் அவனுக்கு தரிசனமாகி **''பயப்படாதே, நான் உன்னோடேகூட இருந்து, உன்னை ஆசீர்வதித்து, உன் சந்ததியை பெருகப் பண்ணுவேன்''** என்றார். கர்த்தர் அவனோடுகூட இருந்து அவனை மிகவும் ஆசீர்வதித்ததினால் அபிமெலேக்கும் அவனது நண்பர்களும், அவனது சேனாதிபதியும் கேராரிலில் அவனோடு சமாதானமாகும்படி வந்தார்கள். அவர்கள் **''நிச்சயமாய்க் கர்த்தர் உம்மோடு கூட இருக்கிறார் என்று கண்டோம்''** என்று சொன்னார்கள். நாம் கர்த்தரோடு ஐக்கியமாய் இருக்கும்போது, கர்த்தர் நம்மோடுகூட இருந்து நம்மை ஆசீர்வதிப்பார். நம்மை புறக்கணித்தவர்கள், நம்மை துரத்தினவர்கள், நம்மோடு வாக்குவாதம் செய்தவர்கள், நம்முடைய சத்துருக்கள் அதைக்கண்டு நம்மோடு சமாதானமாகும்படி வருவார்கள்.

சோதனைகள், போராட்டங்கள் நம்வாழ்க்கையில் வரும்போது, நாம் கர்த்தர் நம்முடன் இல்லை என்று கலங்காமல், சோர்ந்து போகாமல், பொறுமையோடு இருக்க வேண்டும். ஈசாக்குக்கு எதிராக பெலிஸ்தியர்கள் வாக்குவாதம் செய்தபோது, அவன் அவர்களோடு சண்டைபோடவில்லை. பொறுமையாக அந்த இடத்தைவிட்டு விலகிச் சென்றான். எதிரிகள் வெட்கப்பட்டு போகும்படியாக, கர்த்தர் நம்மோடுகூட இருப்பதைக் காண்பிப்பார். நாம் கர்த்தரோடுகூட உள்ள உறவில் தொடர்ந்து நிலைத்திருக்க வேண்டும். கர்த்தருடைய கிருபை உங்களோடுகூட இருப்பதாக. ஆமென்!



# தேவனாலே எல்லாம் ஆகும்

- ஏஞ்சலின் தீப்தி

**..பலத்தினாலும் அல்ல, பராக்கிரமத்தினாலும் அல்ல, என்னுடைய ஆவியினாலேயே ஆகும் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்** (சகரியா 4:6).

மேலே உள்ள வசனம் சுட்டிக் காட்டுவது, நமது அஸ்திபாரம் கர்த்தரது அபிஷேகமே. அந்த அபிஷேகம் ஒரு நாளும் நம்மை தோல்வியடையச் செய்யாது. அது நம்மைப் பற்றியது அல்ல. நம்மை சார்ந்ததும் அல்ல. அது நம் மூலமாக கிரியை செய்கிறது.

இதுதான் அப்போஸ்தலராகிய பேதுருவுக்கும், யோவானுக்கும் நடந்தது. அவர்கள் தைரியமாக தேவாலயத்தில் பிரசங்கித்தார்கள் (அப்போஸ்தலர் 4:13). பிரதான ஆசாரியன், மூப்பர்கள், வேதபாரகர்கள் ஆச்சரியப்படும்படியாய், தைரியமாகவும், அதிகாரத்தோடும் பேசினார்கள். அவர்கள் இருவரும் படிப்பறிவில்லாதவர்கள், போதகராவதற்கு பயிற்சியளிக்கப்படாதவர்கள். அவர்களிருவரும் மீன்பிடிப்பதை தொழிலாகக் கொண்டவர்கள். அவர்களது தைரியமும், அதிகாரமும் எங்கேயிருந்து வந்தது? இயேசு கிறிஸ்துவிடமிருந்து. நமது ஆற்றலுக்கும், தாலந்துகளுக்கும் அப்பாற்பட்டு கர்த்தரால் காரியங்களைச் செய்யமுடியும். அவற்றை நம்மைக் கொண்டே செய்ய விரும்புகிறார். நாம் யாராக இருக்கிறோம் என்பது காரியமல்ல; எங்கிருந்து வந்தோம் என்ற பின்னணியும் காரியமல்ல; நமது கடந்தகால அனுபவமும் காரியமல்ல.

**நடுகிறவனாலும் ஒன்றுமில்லை, நீர்ப்பாய்ச்சுகிறவனாலும் ஒன்றுமில்லை, விளையச் செய்கிற தேவனாலே எல்லாமாகும்** (1 கொரிந்தியர் 3:7).

நாம், ஒரு விதையை பூமியில் விதைக்கலாம். அதற்கு நன்றாக நீர் பாய்ச்சலாம். ஆனால், அது விளைவது மனிதர்களாகிய நமது கரத்தில் இல்லை. அதை விளையச் செய்வது, கர்த்தர் கரத்தில்தான் இருக்கிறது. அதேபோல, நாம் ஒரு காரியத்தைச் செய்ய முயற்சி எடுக்கலாம். நமது தாலந்துகள், அனுபவங்களை வைத்து அந்த முயற்சியில் ஈடுபடலாம். அதிகாரத்திலுள்ளவர்கள், பணம் படைத்தவர்கள் அதற்கு உதவி செய்யலாம். ஆனால், அது நடந்தேறுவது மனிதர்களாகிய நமது கரத்தில் இல்லை. கர்த்தர் அதை வாய்க்கச் செய்தால்தான் உண்டு. கர்த்தர் ஒரு காரியத்தைச் செய்யச் சொல்லும்போது, அது நமக்கு அப்பாற்பட்டக் காரியமாய் இருக்கும் பட்சத்தில், நாம் நம்மை நம்பாமல் இருப்போம். அந்தக் காரியத்தை விட்டு விடாமல், நம் மூலமாக செயல்படப் போகும் கர்த்தரை நம்பி இருப்போம்.



கர்த்தர், கிதியோனைப் பார்த்து மீதியானியரை எதிர்த்துப் போரிடச் சொல்லுகிறார். தாங்கள் ஏற்கெனவே மீதியானியரால் ஒடுக்கப்பட்டு இருப்பதையும், தன்னுடைய இயலாமையையும் கிதியோன் சுட்டிக் காட்டுகிறான். **அப்பொழுது கர்த்தர் அவனை நோக்கிப் பார்த்து: உனக்கு இருக்கிற இந்தப் பலத்தோடே போ; நீ இஸ்ரவேலை மீதியானியரின் கைக்கு நீங்கலாக்கி ரட்சிப்பாய்; உன்னை அனுப்புகிறவர் நான் அல்லவா என்றார்** (நியாயாதிபதிகள் 6:14). நாமும் நமக்கு இருக்கிற பலத்தை (தாலந்துகளை, வசதி வாய்ப்புகளை, சூழ்நிலைகளை) பார்க்காமல், நம்மைப் பெலப்படுத்துகிற இயேசு கிறிஸ்துவையே நோக்கிப் பார்ப்போம். **என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையுஞ் செய்ய எனக்கு பெலனுண்டு** (பிலிப்பியர் 4:13). கர்த்தர் உங்களைக் கொண்டு பெரிய காரியங்களைச் செய்வார். ஆமென்!

**எனக்கு அளிக்கப்பட்ட கிருபையினாலே நான் சொல்லுகிறதாவது: உங்களில் எவனானாலும் தன்னைக் குறித்து எண்ண வேண்டியதற்கு மிஞ்சி எண்ணாமல், அவனவனுக்கு தேவன் பகிர்ந்த விசுவாச அளவின்படியே, தெளிந்த எண்ணமுள்ளவனாய் எண்ண வேண்டும்** (ரோமர் 12:3).

அப்படியே எந்தவொரு காரியத்தை செய்து முடித்தபிறகும், நான்தான் அதை செய்தேன் என்று நம்மைப் பார்க்காமல், நமக்கு தாலந்தையும், ஆற்றலையும், ஆர்வத்தையும் கொடுத்து, அதை நம்மூலமாக செய்து முடித்த கர்த்தருக்கே மகிமையையும், கனத்தையும் செலுத்த மறவாதிருப்போம்.

எல்லா கனமும், மகிமையும் கர்த்தர் ஒருவருக்கே. ஆமென்!

**உங்கள் சந்தாவை புதுப்பித்துவிட்டீர்களா?**

இந்தப் பத்திரிகை வேண்டுவோர் சந்தா அனுப்பி பெற்றுக் கொள்ளவும்.

**உள்நாட்டு வருட சந்தா** ரூ. 200/-
**வெளிநாட்டு வருட சந்தா** ரூ. 2000/-

**S.PAULRAJ KENNEDY** என்ற பெயருக்கு DD/M.O / Cheque மூலம் அனுப்பவும். உங்களது முழு முகவரியையும் எழுதுங்கள். **ICICI** வங்கி வாயிலாகவும் நீங்கள் அனுப்பலாம்.

**ICICI வங்கி கணக்கின் பெயர் : S.PAULRAJ KENNEDY**
**ICICI வங்கி கணக்கு எண் : 0350 0150 7744**

**எங்களது முகவரி :** எஸ்.பால்ராஜ் கென்னடி, ஏ-1, டேஜூ பிளாஸா, 2 தெற்கு அவென்யூ, ஸ்ரீநகர் காலனி, சைதாப்பேட்டை, சென்னை - 600 015. தமிழ்நாடு, இந்தியா



# நிதானம்

- பால்ராஜ் கென்னடி

**நா**ம், பேசுவதிலும், செய்யும் காரியத்திலேயும் பதட்டப்படக்கூடாது. நிதானித்து பேவேண்டும், நிதானித்து காரியங்களைச் செய்ய வேண்டும்.

ஏன் பதட்டம் வருகின்றது? நிதானத்தை இழக்கும்போது பதட்டம் வருகின்றது. எந்தக் காரியத்தைக் குறித்தும் பேசுவதற்கும், செய்வதற்கும் முன்பு அதைக் குறித்து (நம் மனதில்) நாம் யோசிக்க வேண்டும். என்ன பேசப் போகிறோம், ஏன்? எதற்கு? என்ற கேள்விகளையெல்லாம் நமக்குள் நாமே எழுப்பி, யோசிக்க வேண்டும். அப்பொழுது நமக்குள் நிதானம் வரும். நாம் பேசுவதைக் காட்டிலும், செய்வதைக் காட்டிலும், சரியாகப் பேசுவதும், சரியாகச் செய்வதும் முக்கியம். முதலில் யோசித்துவிட்டு, பின்பு பேசுவதும், செய்வதுமாக இருந்தால் எல்லாம் சரியாக இருக்கும்.

நமக்குள் இருக்கும் எண்ணங்களை, சிந்தனைகளை, நோக்கங்களை, விருப்பு, வெறுப்புகளை உடனே மற்றவர்களுக்கு சொல்ல வேண்டுமென்று நினைக்கக் கூடாது. தன் ஆவியை அடக்காத மனுஷன் மதிலிடிந்த பாழான பட்டணம் போலிருக்கிறான் (நீதிமொழிகள் *25:28*) என்று வேதம் சொல்லுகிறது. நாம் நம்முடைய மனதை, உணர்ச்சிகளை அடக்கியிருக்கப் பழக வேண்டும். நம்முடைய அல்லது பொதுவான கருத்துக்கு மாறாகவோ அல்லது எதிர்த்தோ மற்றவர்கள் சொல்லும்போதும், நாம் பதிலெதுவும் சொல்லாமல் அமைதியாயிருக்கப் பழக வேண்டும். பலவானைப் பார்க்கிலும் நீடிய சாந்தமுள்ளவன் உத்தமன்; பட்டணத்தைப் பிடிக்கிறவனைப் பார்க்கிலும் தன் மனதை அடக்குகிறவன் உத்தமன் (நீதிமொழிகள் *16:32*) என்று வேதம் கூறுகிறது. உடல் பலத்தைக் காட்டிலும் மன பலம் முக்கியம் (மனதை அடக்கியிருக்கக்கூடிய பலம்).

நம் மனதில் இருப்பதையெல்லாம் பேச வேண்டுமென்று அவசியமில்லை. தேவை அல்லது அவசியம் ஏற்படும் போது மாத்திரம் பேசினால் போதும். மூடன் தன் உள்ளத்தையெல்லாம் வெளிப்படுத்துகிறான்; ஞானியோ அதைப் பின்னுக்கு அடக்கி வைக்கிறான் (நீதிமொழிகள் *29:11*) என்று வேதம் இதையே சொல்லுகிறது. வேண்டிய அல்லது அவசியமான காரியங்கள் இருந்தால்மாத்திரமே பேசவேண்டும். சில காரியங்கள், நமக்கு பெரிதாக, முக்கியமானதாகக் காணப்படலாம். அது, மற்றவர்களுக்கு பெரிதாக, முக்கியமானதாக இல்லாமலிருக்கும். அப்படி இருக்கும் பட்சத்தில், அதை முன்கூட்டியே யோசித்துப் பார்த்து, பேசாமல் இருக்க வேண்டும். நாம் அதைப் பேசி, அதை அவர்கள் அசட்டை பண்ணினாலோ, புறக்கணித்தாலோ, நமக்கு மனவருத்தமும், சோர்வும் ஏற்படும். தன் வாயைக்



காக்கிறவன் தன் பிராணனைக் காக்கிறான்; தன் உதடுகளை விரிவாய்த் திறக்கிறவனோ கலக்கமடைவான் (நீதிமொழிகள் *13:3*) என்று வேதம் நமக்கு வழி காட்டுகிறது.

நம்மை யார் எதிர்த்துப் பேசினாலும், கோபப்படுத்தினாலும், நாம் உணர்ச்சிவசப்பட்டு (கோபப்பட்டு) பேசிவிடக்கூடாது. நமது சமாதானம் மிகவும் முக்கியம். இதை எப்போதும் மனதில் வைத்திருக்க வேண்டும். இதுவே விவேகம் எனப்படும். இந்த நினைவு, நமக்கு நிதானத்தைத் தரும். இதை வேதம் இப்படியாகச் சொல்லுகிறது: அறிவாளி தன் வார்த்தைகளை அடக்குகிறான்; விவேகி குளிர்ந்த மனமுள்ளவன் (நீதிமொழிகள் *17:27*).

ஒரு சிறு சபையாகக் கூடி, சில காரியங்களைக் குறித்துப் பேசும்போது, மற்றவர்கள் என்ன பேசுகிறார்கள் என்பதை முதலில் கவனிக்க வேண்டும். நமக்கு ஏற்கெனவே தெரிந்த காரியமாக இருந்தாலும் அமைதியாக இருந்து கேட்க வேண்டும். நம்மிடம் அவர்கள் கேட்கும் வரை பொறுமையாக இருக்க வேண்டும். அவசரப்படக்கூடாது. ஒருவேளை நமக்கு அந்தக் குறிப்பிடக் காரியத்தைக் குறித்து முழுமையாகத் தெரியாவிட்டால், அதை வெளிப்படையாகத் தெரிவிக்க வேண்டும். பேசும்போதும், என்ன பேசுகிறோம் என்பதை கவனத்தில் வைத்துக் கொண்டே பேசவேண்டும். சரியான வார்த்தைகளை யோசித்து, நிதானமாக, அவசரப்படாமல் பேச வேண்டும். யோசிக்காமல் பேசினால், அநாவசியமான வார்த்தைகள் வந்துவிடும். யோசிக்கும்போது, நிதானம் வரும். நிதானம் நமக்கு பொறுமை, ஜாக்கிரதை, எச்சரிக்கை உணர்வுகளைத் தரும். தன் வேலையில் ஜாக்கிரதையாயிருக்கிறவனை நீ கண்டால், அவன் நீசருக்குமுன்பாக நில்லாமல், ராஜாக்களுக்கு முன்பாக நிற்பான் (நீதிமொழிகள் *22:29*) என்று வேதம் மிகவும் தெளிவாகக் கூறுகிறது. அதிகாரத்திலுள்ளவர்கள், இப்படிப்பட்ட ஜாக்கிரதை, எச்சரிக்கை உணர்வுகளை உடையவர்களையே தங்களுக்கு உதவியாக வைத்துக் கொள்ள விரும்புவார்கள். நல்ல பதவியில் இருப்பவர்களின் உதவியைத் தேடியும், அலுவல் காரணமாகவும் பலர் வருவார்கள். அவர்களிடம் நிதானித்து, பொறுமையோடு, ஜாக்கிரதையாக, எச்சரிக்கையாகப் பேச வேண்டும். இவர்களுடைய பேச்சு, நடத்தை, பதவியிலிருப்பவர்களை பிரதிநிதித்துவப்படுத்துவதாகும். அதே சமயத்தில், தங்கள் எஜமானிடத்திலும் நிதானித்து (காரியங்களைக் குறித்தும், மனிதர்களைக் குறித்தும்) பேச வேண்டும். அவசரப்பட்டோ, பதட்டப்பட்டோ எதையும் பேசவோ, செய்துவிடவோக் கூடாது.

நாம் பேசும்போதும், காரியங்களைச் செய்யும் போதும், ஞானமாய் செய்ய வேண்டும். முதலாவது யாரிடம், எதற்காக, ஏன் பேசுகிறோம், செய்கிறோம் என்பதையும், பின்பு அதை எப்படி பேசவேண்டும், செய்ய வேண்டுமென்பதையும் குறித்து நன்கு யோசிக்க வேண்டும். அவசரப்படக் கூடாது. அவசரப்பட்டால் நிதானம் போய்விடும், பதட்டம் வந்துவிடும். மூடன் ஞானத்தில் பிரியங்கொள்ளாமல், தன் மனதிலுள்ளவைகளை வெளிப்படுத்தப் பிரியப்படுகிறான் (நீதிமொழிகள் *18:2*) என்று வேதம் இதையே குறிப்பிடுகிறது.

வேதத்தின் வார்த்தைகளே, இந்த நிதானத்தை நமக்குத் தரும். ஏனென்றால் எல்லாவற்றையும் சிருஷ்டித்தவர் எழுதின புஸ்தகமே வேதாகமம். அவரைப்போல ஞானமுள்ளவர் ஒருவரும் இந்த பூமியில் கிடையாது. வேதத்தை இரவும், பகலும் நாம் தியானிக்கும்போது, நமக்கு ஞானம், அறிவு, புத்தி, நிதானம், பொறுமை, விவேகம் வரும். நமது யோசனை பலப்படும். எல்லாவற்றிலும் (பேச்சிலும், செய்கையிலும்) தெளிவு உண்டாகும். வேதமே வெளிச்சம். ஆமென்!